# அடிப்படை உபதேசம்

## ஞானஸ்நானம்

## ஓர் புதிய துவக்கம்

எழுத்து

சகோ. டிக்சன்

தமிழாக்கம் சகோதரி. குளோரி ஸ்டீபன்

# வேதாகமத்தின்படி ஞானஸ்நானம்

ஞானஸ்நானம் என்ற வார்த்தையின் ஆங்கில பதமாகிய Baptism, கிரேக்க வார்த்தையான '**Baptizo**' விலிருந்து வந்தது. இதற்கு மூழ்குதல் என்று அர்த்தம். யூத மக்கள் மேசியாவிற்காக காத்திருந்தார்கள், மேலும் அவர் வரும்போது, அவர் ஜனங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார் என நம்பினார்கள். அதனால் தான் **யோவான் 1:25** யில், யோவான் ஸ்நானகனிடம் தலைவர்கள், "நீர் கிறிஸ்துவுமல்ல, எலியாவுமல்ல, தீர்க்கதரிசியானவருமல்லவென்றால், ஏன் ஞானஸ்நானம் கொடுக்கிறீர்" என கேள்வி கேட்டார்கள்

புதிய ஏற்பாட்டின் மொழிபெயர்பாளர்கள், 'Baptizo' என்ற வார்த்தையை கண்டபோது, அதற்கு ஒத்த வார்த்தையை கண்டுபிடிக்க இயலாமல், ஒலியின் அடிப்படையில் "Baptism" என்று ஒலிப்பெயர்பு செய்தனர்.

'வேதாகமத்தின்படி ஞானஸ்நானம்' என்பது ஆழமான முக்கியத்துவத்தை கொண்டுள்ளதால், எதிரியானவன் அதைப்பற்றி அநேக முரண்பாடுகளை ஏற்படுத்தியுள்ளான். 'வேதாகமத்தின்படி ஞானஸ்நானம்" என்ற பதத்தைப் பற்றி நீங்கள் ஆச்சரியப்படலாம். கிறிஸ்தவர்கள் மத்தியில் செயல்படுத்தப்பட்டு வரும் பல வகையான ஞானஸ்நானங்களிலிருந்து, வேதம் கற்றுக் கொடுக்கும் ஒரே ஞானஸ்நானத்தை வேறுபடுத்தி காட்டுவதற்காகவே, 'வேதாகமத்தின்படி ஞானஸ்நானம்' என்ற பதம், இப்புத்தகத்தில் பயன் படுத்தப்படுகிறது.

**இன்னும் அதிகமாக கற்றுக் கொள்வோம்**

யோவான் ஸ்நானகன், கர்த்தராகிய இயேசுவுக்கு கொடுத்த ஞானஸ்நானத்திலிருந்து, இந்த ஆய்வை துவங்குவோம்.

**லூக்கா 7:29-30 இப்படியாக கூறுகிறது:**

29 யோவானுடைய உபதேசத்தைக் கேட்ட ஆயக்காரர் முதலான சகல ஜனங்களும் அவனாலே ஞானஸ்நானம் பெற்று, தேவன் நீதிபரர் என்று அறிக்கையிட்டார்கள்.

30 பரிசேயரும் நியாயசாஸ்திரிகளுமோ அவனாலே ஞானஸ்நானம் பெறாமல் தங்களுக்குக் கேடுண்டாகத் தேவனுடைய ஆலோசனையைத் தள்ளிவிட்டார்கள்

ஞானஸ்நானத்திற்கு கீழ்ப்படியாமல் இருப்பதினால், மோசேயின் நியாயப்பிரமாணத்தில் வல்லுனர்களாகிய பரிசேயர்கள், தேவனுக்கு கீழ்படிய மருத்தார்கள். "பரிசேயரும் வாதாடுபவர்களும் தேவனால் ஞானஸ்நானம் பெறாமல் தங்களைத் தாங்களே நிராகரித்தார்கள்" என பெரேய இலக்கிய வேதாகமம் கூறுகிறது.

ஆதலால் ஞானஸ்நானம் என்பது மனிதனின் யோசனை அல்ல, அது தேவனின் யோசனை, இதனால் மனிதன், தனது வாழ்க்கையை குறித்த தேவனின் நோக்கத்தை புரிந்துக் கொள்ள முடியும்.

கர்த்தராகிய இயேசு பாவமில்லாதவராக இருந்தபோதும், தம்மை பாவமான மனிதருக்குள் ஒருவராக அடையாளப்படுத்திக் கொள்வதற்காக, அவர் யோவான் ஸ்நானகனால் ஞானஸ்நானம் பெறும்படி அவரை தேடி வந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

யோர்தான் நதியண்டையில் நடந்த காட்சி ஆச்சரியமாக இருந்தது. பாவமில்லாத தேவகுமாரனாகிய கர்த்தராகிய இயேசு, வரி வசூலிப்பவர்கள் மற்றும் பிற பாவிகளுடன் சேர்ந்து நின்று, யோவான் தனக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி காத்திருந்தார். தம்மை விசுவாசித்து ஞானஸ்நானம் பெறுபவர்கள், நீதிமான்களின் வரிசையில் நிற்கும்படிக்கே, இயேசு அப்படிச் செய்தார்.

இயேசு எப்படி ஞானஸ்நானம் பெற்றார் எனப் பார்ப்போம்.

**மத்தேயு 3:16** யில் நாம் இப்படியாக வாசிகிறோம், இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; தேவ ஆவி புறவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார்.

கர்த்தராகிய இயேசு தண்ணீரிலிருந்து வெளியேறினார் என்று பார்க்கிறோம். அப்படியென்றால், அவர் முழுமையாக நதியில் மூழ்கியிருந்தார் என்று அர்த்தமாகிறது. 'Baptizo' (பாப்டிசோ) என்ற வார்த்தையும், அமிழ்ந்திருப்பது அல்லது மூழ்கியிருப்பது என்ற அர்த்தம் உடையதாகும். ஆகையால், கர்த்தராகிய இயேசுவே இவ்விதமாக ஞானஸ்நானம் பெற்றிருக்க நாம் விதி விலக்கல்ல.

இயேசு ஞானஸ்நானம் எடுத்து தண்ணீரிலிருந்து வெளியே வந்த போது, அதை கண்ட பரலோக பிதா எவ்வளவு சந்தோஷமாக இருந்தார் என்பதை பார்ப்போம்.

**மத்தேயு 3:17** அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது.

**பிதாவாகிய தேவன், கர்த்தராகிய இயேசுவை தன்னுடைய நேச குமாரன் என்றும், தாம் அவரில் பிரியமாய் இருக்கிறார் என்பதையும் வெளியரங்கமாய் உரைத்தது இதுவே முதல்முறையாகும்.**

ஆம், நாமும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் போல தண்ணீரில் ஞானஸ்நானம் எடுக்கும்போது பரம பிதாவை பிரியப்படுத்துகிறோம்.

**ரோமர் 6:4** மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும் படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம்பண்ணப்பட்டோம்.

ஞானஸ்நானம் அடக்கம் பண்ணப்படுவதற்கு ஒத்ததாக இங்கே பார்க்கப்படுகிறது. நாம் புதிதான ஜீவனைப் பெற்று வாழ விரும்பினால், நாம் ஞானஸ்நானத்தின் வழியே செல்லவேண்டும், இதன்மூலம் சிலுவையில் இயேசுவின் மரணத்தோடு நம்மை அடையாளப்படுத்திக் கொள்கிறோம்.

பின் வரும் இரு வசனங்கள், ஞானஸ்நானத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி பெரிதான ஒரு வெளிப்பாட்டை தருகிறது.

**ரோமர் 6:5** ஆதலால், அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம், என்று கூறுகிறது.

மரணம் இல்லாமல் உயிர்த்தெழுதலுக்கு இடம் இல்லை. ஆதலால், கர்த்தராகிய இயேசுவின் மரணத்தில் நாம் இணைக்கப்பட்டால் மட்டுமே, அவருடைய உயிர்த்தெழுதலில் நாம் பங்குக் கொள்ள முடியும் என்பதே இந்த வசனத்தின் பொருளாகும். ஞானஸ்நானத்தின் மூலம் நாம் கர்த்தராகிய இயேசுவின் மரணத்தோடு நம்மை அடையாளப்படுத்திக் கொள்ள முடியும்.

<u>பழைய ஏற்பாட்டில் ஞானஸ்நானத்தைக் குறித்து பல அடையாளங்கள் அல்லது பிரதிநிதித்துவங்கள் உண்டு</u>

**1 பேதுரு 3:20,21** யில் இப்படியாக வாசிக்கிறோம், அந்த ஆவிகள், பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம்பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது, கீழ்ப்படியாமற்போனவைகள்; அந்தப் பேழையிலே சிலராகிய எட்டுப்பேர் மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினாலே காக்கப்பட்டார்கள். 21 அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது.

நோவாவின் நாட்களில் வந்த தண்ணீர் வெள்ளம் ஞானஸ்நானத்துடன் ஒப்பிடப்படுகிறது, அதினால் நோவாவும் அவனது குடும்பமும் காப்பாற்றப்பட்டனர், ஆனால், துன்மார்க்கர் அனைவரும் அழிக்கப்பட்டனர்.

எட்டுபேர் காப்பாற்றப்ட்டனர், அதாவது, நோவா, அவனது மனைவி, அவனது மூன்று குமாரர்கள் மற்றும் அவர்களின் மனைவிகள். தேவன் இதை ஞானஸ்நானத்தின் சாயலாக முன் வைத்ததால், அந்த சமயத்தில் நோவாவின் குமாரர்களுக்கு பிள்ளைகள் இல்லாதிருந்தது என நான் நம்புகிறேன். அனைவரும் பெரியவர்கள் தான். ஆகையாலே, குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் நடைமுறையை இந்த வெளிச்சத்திலிருந்து பார்க்கவேண்டும்.

தேவனால் அனுப்பப்பட்ட தண்ணீர் தீமையை அழித்தது மட்டுமால்லாமல், தேவனின் வார்த்தையை விசுவாசித்த எட்டு பேரையும் பாதுகாத்து பேழைக்குள் நுழையச் செய்தது. அதைப்போலவே ஞானஸ்நானத்தின் ஆவிக்குரிய முக்கியத்துவம் என்னவென்றால், தீமையானது அழிக்கப்படுகிறது அதனால், தேவன் நம்மை நித்திய அழிவிலிருந்து காப்பாற்ற முடிகிறது.

<u>அடுத்த ஒப்பனை யாத்திராகமம் புத்தகத்தில் காணப்படுகிறது.</u>

**1 கொரிந்தியர் 10:1,2** இப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் எவைகளை அறியவேண்டுமென்றிருக்கிறேனென்றால்; நம்முடைய பிதாக்களெல்லாரும் மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள், எல்லாரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்து வந்தார்கள். 2 எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் மோசேயால் கடலின் வழியே நடத்தப்பட்டனர். இது ஞானஸ்நானத்திற்கு ஒப்பிடப்படுகிறது. இஸ்ரவேலரை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்த தேவன், அவர்கள் செங்கடலை கடக்க செய்ததின் மூலம், எதிரியானவன் இனி ஒருபோதும் அவர்களை அடிமைப்படுத்த கூடாதபடிக்கு முற்றிலும் செயலிழக்கப்பட்டார்கள் என்பதை உறுதிச் செய்தார்.

செங்கடலை கடந்தபின் இஸ்ரவேலர்கள், மோசேயின் சீஷர்களாக மாறினார்கள். நாமோ 'வேதாகமத்தின்படி ஞானஸ்நானத்திற்கு' நம்மை ஒப்புக்கொடுக்கும்போது, கர்த்தராகிய இயேசுவின் கர்த்தத்துவத்தை அங்கிகரிக்கிறோம்.

**யாத்திராகமம் 15:8** "உமது நாசியின் சுவாசத்தினால் ஜலம் குவிந்து நின்றது; வெள்ளம் குவியலாக நிமிர்ந்து நின்றது; ஆழமான ஜலம் நடுக்கடலிலே உறைந்துப் போயிற்று"

செங்கடலை தமது நாசியின் சுவாசத்தால் பிளந்தபோது, தேவனின் வல்லமை வெளியரங்கமானது. சிருஷ்டிப்பின் போது மனிதனுக்கு ஜீவனைக் கொடுத்ததும் இதே சுவாசம் தான்.

**ஆதியாகமம் 2:7** தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான், என்று கூறுகிறது.

ஆதாமுக்கு ஜீவனைக் கொடுத்த அதே தேவனின் சுவாசம் தான் செங்கடலில் செயல்பட்டது, மேலும் அங்கு, அடிமைத்தன வாழ்விலிருந்து இஸ்ரவேலர்கள் விடுவிக்கப்படுவதற்கு தேவன் ஒரு வழியை ஏற்படுத்தினார். தேவனின் இந்த மீட்பானது ஞானஸ்நானத்தில் சாட்சியமளிக்கிறது.

இந்த சம்பவத்தில் மகிமையான பகுதி எதுவென்றால், இஸ்ரவேலர்களுக்கு பாதுகாப்பான சுவராக நின்ற அதே தண்ணீர்கள் தான் எகிப்தியரின் படையை அழிக்கச்கூடிய மரண கண்ணியாகவும் மாறினது.

எகிப்தியரால் இஸ்ரவேல் புத்திரரை பின்தொடர முடியவில்லை. எகிப்தியரின் பலமாய் இருந்த வீரர்கள், குதிரைகள் மற்றும் ரதங்கள் முழுமையாக தண்ணீரில் அமிழ்ந்து போயின.

<u>ஞானஸ்நானம் என்பது வெறும் சடங்கு அல்ல, அதற்கு மிகப்பெரிய ஆவிக்குரிய முக்கியத்துவம் உண்டு. இதை முழுமையாக புரிந்துக் கொண்டவர்கள், தேவனின் ஆலோசனையை எப்போதுமே எதிர்க்க மாட்டார்கள்.</u>

இன்னும் ஒரு அருமையான ஒப்பனை பழைய ஏற்பாட்டில் காணப்படுகிறது. அது சீரிய படை தலைவனாகிய நாகமானின் இயற்கைக்கு அப்பாற்பட்ட சுகமடைதலாகும்.

2 இராஜாக்கள் புத்தகம் 5 ஆம் அதிகாரத்தில் இந்த நாகமான் என்ற குஷ்டரோகியை பற்றி படிக்கிறோம். குஷ்டரோகம் என்னும் வியாதியானது, ஒருவர் தோலிலும் சதையிலும் உணரும் திறனை இழக்கச் செய்கிறது என்பதை நாம் அறிவோம். அதனால் தான், ஒருவர் இந்த வியாதியால் பாதிக்கப்படும் போது, அவர்களால் பாதிக்கப்பட்ட இடத்தில் காயத்தையோ, சேதத்தையோ உணர முடிவதில்லை.

மனிதர்கள் மீது பாவத்தின் தாக்கமும் இதற்கு ஒத்ததுதான். இதில் தேவனைப் பற்றிய உணர்வை இழப்பதால், ஏற்படும் சேதமானது கடுமையான விளைவுகளுக்கு நேராக நடத்துகிறது.

நாகமான், தேவனின் தீர்க்கதரிசியான எலிசாவிடம் சுகம் பெறும்படி போன போது, தீர்க்கதரிசி அவனை யோர்தான் நதிக்கு போய் அதில் ஏழு முறை கழுவும்படி சொன்னான்.

**2 இராஜாக்கள் 5:10,** அப்பொழுது எலிசா: அவனிடத்தில் ஆள் அனுப்பி, நீ போய், யோர்தானில் ஏழுதரம் ஸ்நானம் பண்ணு; அப்பொழுது உன் மாம்சம் மாறி, நீ சுத்தமாவாய் என்று சொல்லச் சொன்னான்.

தேவனின் வழிகள் எளிதானது ஆனால் ஆச்சரியமானது. பெரும்பாலும் மனிதன் எளிமையானதை கூட கடுமையானதாக மாற்றிவிடுகிறான். தேவனின் வார்த்தை அப்படியே நம்பப்பட்டு கீழ்படியபட வேண்டியவை. மனிதனின் சிறந்த ஆற்றலால் நடக்காத அற்புதங்கள் கூட ஆண்டவரின் வார்த்தைக்கு கீழ்ப்படியும் போது நடப்பதை நாம் காண முடியும்.

**2 இராஜாக்கள் 5:11,12** அதற்கு நாகமான் கடுங்கோபங்கொண்டு, புறப்பட்டுப்போய்: அவன் வெளியே வந்து நின்று, தன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் தொழுது, தன் கையினால் அந்த இடத்தைத் தடவி, இவ்விதமாய்க் குஷ்டரோகத்தை நீக்கி விடுவான் என்று எனக்குள் நினைத்திருந்தேன். 12 நான் ஸ்நானம்பண்ணிச் சுத்தமாகிறதற்கு இஸ்ரவேலின் தண்ணீர்கள் எல்லாவற்றைப் பார்க்கிலும் தமஸ்குவின் நதிகளாகிய ஆப்னாவும் பர்பாரும் நல்லதல்லவோ என்று சொல்லி, உக்கிரத்தோடே திரும்பிப்போனான்.

இன்றைக்கும் ஆநேகர் நாகமானைப் போலவே செய்கின்றார்கள். ஏனென்றால் மக்கள் ஞானஸ்நானத்தைப் பற்றி முன்கூட்டியே சில கருத்துகளை உடையவர்களாக இருக்கிறார்கள். பெரும்பாலும் அது தேவனின் வார்த்தைக்கு உட்பட்டதாக இருக்காது, ஆனால் பாரம்பரியத்தை அல்லது அதைப்பற்றிய தங்களின் சொந்த எதிர்ப்பார்ப்பை அடிப்படையாக கொண்டிருக்கும். இதனால் பாவம் என்ற குஷ்டரோகம் நீங்கப்படாதவர்களாக இருக்கின்றார்கள்.

நாகமான் கொடிய குஷ்டரோகத்திலிருந்து விடுவிக்கப்படுவதற்கு மிக சமீபத்தில் இருந்தான், ஆனால் அவன் அதை விட்டு அகன்று போனான். இன்றைக்கு எத்தனை பேர் ஞானஸ்நானத்தைப் பற்றி தேவனின் வார்த்தை சொல்வதை கேட்க மனமில்லாமல், ‘வேதாகமத்தின்படி ஞானஸ்நானம்’ எடுப்பதற்கு கீழ்படிய மறுக்கிறார்கள்?

**2 இராஜாக்கள் 5:13** யில் நாம் இப்படியாக வாசிக்கிறோம், அவன் ஊழியக்காரர் சமீபத்தில் வந்து, அவனை நோக்கி: தகப்பனே, அந்தத் தீர்க்கதரிசி ஒரு பெரிய காரியத்தைச் செய்ய உமக்குச் சொல்லியிருந்தால் அதை நீர் செய்வீர் அல்லவா? ஸ்நானம் பண்ணும், அப்பொழுது சுத்தமாவீர் என்று அவர் உம்மோடே சொல்லும் போது, அதைச் செய்யவேண்டியது எத்தனை அதிகம் என்று சொன்னார்கள்.

நாகமானிடம் விவேகமான ஒருவன் இருந்தான். நம்முடைய பிடிவாதத்தை மேற்கொள்ளக் கூடிய ஆலோசனையை கொடுத்து உதவும் தேவ ஜனங்கள் நம்மோடு இருப்பதற்காக தேவனுக்கு ஸ்தோத்திரம். நாகமானின் ஊழியக்காரன், “போய், கழுவி, சுத்தமாகும்” என்றான். அந்த விசுவாசம் பாராட்டுக்குரியது. அது மிகவும் சிறந்தது.

மேலும் படிப்போம்

**2 இராஜாக்கள் 5:14** யில், அப்பொழுது அவன் இறங்கி, தேவனுடைய மனுஷன் வார்த்தையின் படியே யோர்தானில் ஏழுதரம் முழுகினபோது, அவன் மாம்சம் ஒரு சிறு பிள்ளையின் மாம்சத்தைப்போல மாறி, அவன் சுத்தமானான்.

இது வல்லமையால் நிரம்பின வசனம். ஏழுமுறை என்பது பரிபூரணத்தைக் குறிக்கிறது. வேதாகமம் பெரும்பாலும் ஏழு என்ற எண்ணை பூரணமான எண்ணாக குறிக்கிறது.

<u>தேவன் ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தது போல ஒருவன் ஞானஸ்நானம் பெறும்போது, தமது ஜனத்திற்கு தேவன் வாக்குத்தத்தம் பண்ணின இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறான்.</u>

நாகமான் தேவ மனுஷன் கற்பித்தபடியே செய்ய வேண்டியதாக இருந்தது. அதற்கு அவன் கீழ்படிந்தபோது தான், அவன் தனது சுகத்தைப் பெற்றுக் கொண்டான்.

குஷ்டரோகத்தால் நாசமான அவனது சரீரம் எப்படி குணமடைந்தது என்றும் அவன் எப்படி கழுவப்பட்டான் என்பதை பற்றியும் சற்று ஆழமாக ஆராய்ந்து பார்ப்போம்.

**2 இராஜாக்கள் 5:14** யில், அப்பொழுது அவன் இறங்கி, தேவ மனுஷனின் வார்த்தையின் படியே யோர்தானில் ஏழுதரம் முழுகினபோது, அவன் மாம்சம் ஒரு சிறு பிள்ளையின் மாம்சத்தைப்போல மாறி, அவன் சுத்தமானான்.

அவனது மாம்சம் புதுப்பிக்கப்பட்டது (Restored). எந்த அளவிற்கு புதிப்பிக்கப்பட்டது?" "ஒரு சிறு பிள்ளையின் மாம்சத்தைப் போல". ஒரு சிறு பிள்ளையின் மாம்சம் எவ்வளவு உணரும் திறன் கொண்டிருக்கும் என்பதை அறிவோம். குஷ்டரோகம் கொண்ட மனுஷனின் மாம்சத்திற்கு சிறு பிள்ளையின் மாம்சத்திற்கும் இடையே இருக்கும் முற்றிலுமான வேறுபாட்டை கவனிக்காமல் இருக்க முடியாது. உணர்வற்று இருந்த தோலும் சதையும் இப்போது மிகவும் உணர்வு உள்ளதாக மாறினது. இது தான் தேவனின் அற்புதமான செயலாகும்.

தற்போதுள்ள அலைபேசிகள் மற்றும் கணினிகளில் ஒரு வசதி உண்டு. அதை "முதன்மை மீட்டமைப்பு" (Master Reset) என அழைக்கலாம். இதனால் அது தொழிற்சாலையில் வரும் போது எப்படி இருந்ததோ அது போலவே மாற்றப்படும். அதைப்போலவே ஞானஸ்நானத்திற்கு கீழ்ப்படிகின்றவர்கள் ஆரோக்கயமான நிலைக்கு மாற்றப்படமுடியும். ஒவ்வொரு மனிதனும் தேவனுடைய ஆதி திட்டத்திற்கும், வடிவமைப்பிற்கும் மீண்டும் கொண்டுச் செல்லப்பட முடியும்.

அநேக நேரங்களில் பல பாவங்களால் நமது இருதயங்கள் கடினப்பட்டு போகின்றன. நாம் தேவனின் ஆலோசனைக்கு கீழ்ப்படிந்து, ஞானஸ்நானம் பெறும் போது, நமது உணர்வை மீண்டும் தேவன் திரும்பத் தருகிறார்.

ஆதினால் நாம் மென்மையானவர்களாகவும் மிருதுவானவர்களாகவும் மாறுகிறோம். பரிசுத்த ஆவியானவரின் தூண்டுதலை உணரக்கூடிய அளவிற்கு மென்மையானவர்களாகவும், நமது வாழ்வில் அவர் தமது செயலை செய்ய அனுமதிக்கும் அளவிற்கு மிருதுவானவர்களாகவும் மாறுகிறோம்.

**ஒருவர் ஞானஸ்நானம் எடுப்பதற்கு உண்டான நிபந்தனைகள் யாவை?**

சில மக்கள் ஞானஸ்நானம் எடுக்க விரும்பும் நபரை ஞானஸ்நானத்திற்கு நேராக நடத்தும் முன் அவரது மனந்திரும்புதலை உறுதிச் செய்யும் பொருட்டு கொஞ்ச காலம் கண்காணிக்க வேண்டும் என்ற கருத்துடையவர்களாக இருப்பார்கள்.

இதைப் பற்றி வேதம் என்ன கற்பிக்கிறது என பார்ப்போம்.

அப்போஸ்தலர் 8 ஆம் அதிகாரத்தில் எருசலேமிலிருந்து தேவனை ஆராதித்துவிட்டு தனது ரதத்தில் திரும்பி வரும் எத்தியோப்பிய மந்திரியைப் பற்றி வாசிக்கிறோம். அவன் ஏசாயா புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தான். ஆனால் அந்த தீர்க்கதரிசனத்தின் உண்மையான அர்த்தத்தை புரிந்துக் கொள்ள முடியவில்லை. தேவ ஆவியானவர் பிலிப்புவை இரதத்தில் ஏறச் சொன்னார்.

என்ன ஆச்சரியமான தேவன்! உண்மையை தேடும் இருதயம் ஒருபோதும் தனித்துவிடப்படுவது இல்லை. இப்பொழுது, பிலிப்பு அந்த எத்தியோப்பிய மந்திரி படித்துக் கொண்டிருந்த பகுதி, தேவ ஆட்டுக்குட்டியாகிய இயேசுவை குறிக்கிறது என்று பிலிப்பு அவனுக்கு விளக்கினான். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றின நற்செய்தியை கேட்டப்பின், அவன் கேட்ட அடுத்த காரியம் என்னவென்றால், ஞானஸ்நானம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது தான்.

**அப்போஸ்தலர் 8:36** யில், இவ்விதமாய் அவர்கள் வழிநடந்து போகையில், தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி: இதோ, தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன என்றான்.

அந்த எத்தியோப்பிய மந்திரி ஒருவேளை இந்நாட்களில் வாழ்ந்திருந்து, இப்படிப்பட்ட விருப்பத்தை தெரிவித்திருந்தால், அவனுக்கு பின்வரும் பதில் தான் கிடைத்திருக்கும், “ஒன்று அல்லது இரண்டு மாதங்கள் காத்திருந்து, நீ உண்மையிலேயே விசுவாசித்து மனந்திரும்பி இருக்கிறாயா என்று பார்ப்போம். அதற்கு பின் நீ ஞானஸ்நானம் எடுப்பதற்கு நாங்கள் ஏற்பாடு செய்கிறோம்” என்பதே.

தேவ ஆவியால் நடத்தப்பட்ட பிலிப்புவுக்காக கர்த்தரை ஸ்தோத்தரிப்போம்.

**அப்போஸ்தலர் 8: 37,38** அதற்கு பிலிப்பு: நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லையென்றான். அப்பொழுது அவன்: இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி; 38 இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள் ; பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங்கொடுத்தான்.

ஆம், உங்கள் முழு இதயத்தோடு இயேசு கிறிஸ்துவை தேவ குமாரன் தான் என்று நீங்கள் விசுவாசித்தால், நீங்கள் ஞானஸ்நானம் பெற ஆயத்தமாய் இருக்கிறீர்கள், காத்திருப்பு காலம் தேவையில்லை.

இப்பொழுது, பிலிப்பு ஒரு போதகர் அல்ல ஆனால் ஒரு சுவிசேஷகர் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். போதகர்கள் மட்டும் தான் மக்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க முடியும் என்ற தவறான கருத்தை அநேகர் கொண்டுள்ளார்கள். இந்த கருத்து சரியானது இல்லை என்பதை இந்த சம்பவம் நிரூபிக்கிறது.

கர்த்தராகிய இயேசுவின் சீஷனாகிய பேதுரு, பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்று தனது முதல் பிரசங்கத்தை பிரசங்கித்தார். அவர் பிரசங்கித்த போது, அதை கேட்டவர்களின் இருதயத்தில் அந்த பிரசங்கம் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது.

**அவர்கள் கேட்ட கேள்வி என்னவெனில், அப்போஸ்தலர் 2:37,** இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே, நாங்கள் என்னசெய்ய வேண்டும் என்றார்கள்

அபிஷேகம் நிறைந்த பிரசங்கம் எப்போதுமே அதை கேட்பவர்களை, “நாங்கள் என்ன செய்ய வேண்டும்?” என்ற கேள்வியை கேட்ட வைக்கும்.

**அப்போஸ்தலர் 2:38** பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.

மனந்திரும்புதல் மற்றும் விசுவாசம் ஆகியவை ஒருவர் ஞானஸ்நானம் பெறும் முன் செய்ய வேண்டிய இரண்டு முக்கியமான காரியங்களாகும்.

மனந்திரும்புதல் என்பது நாம் சிந்திக்கும் முறையை மாற்றிக்கொள்வது ஆகும். மனதளவில் ஒரு திருப்பம் என்பது தான் மனந்திரும்புதல். அது பாவமான வழியிலிருந்து திரும்பி, இயேசுவை கர்த்தர் என்றும் இரட்சகர் என்றும் ஏற்றுக் கொள்வதாகும்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிற்கு முன்பு வந்த யோவான் ஸ்நானகன் மனந்திரும்புதலை பிரசங்கிக்கிறவராக வந்தார். அப்படியே, நமது கர்த்தராகிய இயேசு தனது பொது ஊழியத்தை துவங்கினபோது மனந்திரும்புதலை பிரசங்கிக்க துவங்கினார். ஞானஸ்நானத்திற்கு அது மிகவும் முக்கியமானது. குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்க கூடாததற்கு இதுவும் ஒரு காரணமாகும். ஏனென்றால் அவர்களால் மனந்திரும்ப முடியாது.

**2 கொரிந்தியர் 7:10 யில் வேத வார்த்தை எவ்வளவு அழகாக கூறுகிறது,** "தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக் கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது; லௌகிக துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது".

**அப்போஸ்தலர் 16:33** யில், பவுல் மற்றும் சீலாவால் அதே ராத்திரியில் ஞானஸ்நானம் பெற்ற சிறை காவலர் மற்றும் அவனது குடும்பத்தைப் பற்றி வாசிக்கிறோம். ஞானஸ்நானம் அவ்வளவு அவசரமானது. காலம் தாழ்த்தாமல் விரைவாக கீழ்படிய வேண்டிய ஒன்று.

**மற்றொரு முக்கியமான கேள்வி என்னவெனில், "எந்த நாமத்தில் ஞானஸ்நானம் பெற வேண்டும்?"**

பிரதான கட்டளை என்று அழைக்கப்படும் **மத்தேயு 28:18-20** யில் கர்த்தராகிய இயேசு தாமே சமீபத்தில் வந்து அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 19 ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, 20 நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார்.

உலகத்தின் சிருஷ்ப்பில் ஈடுபட்ட திருத்துவ தேவன், மீண்டும் ஒரு விசை ஞானஸ்நானத்தின் மூலமாக, நமது மீட்பில் கிரியை செய்கிறார். அதனால் தான் இயேசு தாமே, ஞானஸ்நானமானது "…பிதா, குமாரன பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே" கொடுக்கப்பட வேண்டும் என்றார். இது தான் 'வேதாகமத்தின்படியான ஞானஸ்நானம்.'

நீங்கள் இதுவரை தேவனின் வார்த்தைபடி தண்ணீரில் ஞானஸ்நானம் எடுக்கவில்லை என்றால், இப்போதே அதை செய்யுங்கள். தேவனின் வார்த்தை போதிக்கும் விதத்திற்கு ஒத்ததாக அதை செய்யும்போது தான், அது தேவனால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அப்படி இல்லாத எதுவுமே வெறும் சடங்கு தான்.

இந்த சத்தியம் உங்களுக்கு ஆசீர்வாதமாக இருந்தால், இதற்கு கீழ்படிந்த பின் மற்றவர்களுக்கு பகிரவும்.

# உங்கள் கேள்விகளுக்கான பதில்கள்

- ஞானஸ்நானம் ஒரு கிறிஸ்தவ பாரம்பரியமா?
- குழந்தை ஞானஸ்நானத்தை பற்றி வேதாகமம் கற்பிக்கிறதா?
- ஞானஸ்நானத்தின் நோக்கம் என்ன?
- நான் எப்படி ஞானஸ்நானம் எடுக்க வேண்டும்?
- ஞானஸ்நானத்தின் ஆவிக்குரிய முக்கியத்துவம் என்ன?

இவற்றைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கிறீர்களா, அப்படியென்றால் இந்த புத்தகம் உங்களுக்கானது. ஜெபத்தோடு படியுங்கள், அப்பொழுது உங்களை எல்லா சத்தியத்திற்குள்ளும் நடத்தும் பரிசுத்த ஆவியானவரின் குரலை நீங்கள் நிச்சயமாக கேட்பீர்கள்.